# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2015 / 2016 (ஜூன்/ ஜூலை - 2018)

**HYS 4113 : Sources of Sri Lankan History (Chronicles & Inscriptions)**
**HYS 4113 : இலங்கை வரலாற்றின் மூலங்கள் (இலக்கியங்களும் சாசனங்களும்)**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

## பகுதி - I

1) இலங்கையில் பாளி இலக்கிய வரலாற்று மரபு தோன்றிய முறைமையைச் சுருக்கமாக விளக்கி, அவை கூறும் ஆதிகால, இடைக்கால வரலாற்றின் நம்பகத் தன்மையில் செல்வாக்குச் செலுத்திய பிற காரணிகளை உதாரணங்கள் காட்டி விபரிக்குக. (20 புள்ளிகள்)

2) இலங்கை வரலாற்றை அறிய உதவும் முக்கிய தொல்பொருட் சான்றுகள் எவை? அவை பண்டைய கால வரலாறு பற்றிய ஆய்வில் நம்பகரமான சான்றுகளாகக் கொள்ளப்படுவதற்கான காரணங்களை எடுத்துக் கூறுக. (20 புள்ளிகள்)

3) இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய ஆய்வில் ஈமச் சின்னங்கள் பற்றிய தொல்லியல் ஆய்வுகள் பெறும் முக்கியத்துவத்தை உதாரணங்கள் காட்டி ஆராய்க. (20 புள்ளிகள்)

4) கிழக்கிலங்கையில் அடையாளம் காணப்பட்ட முக்கிய தொல்லியல் மையங்களின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்க. (20 புள்ளிகள்)

## பகுதி - II

5) இலங்கையின் புராதன வரலாறு பற்றிய ஆய்வில் பிராமிச் சாசனங்கள் பெறும் முக்கியத்துவத்தை உதாரணங்கள் காட்டி விபரிக்குக. (20 புள்ளிகள்)

6) இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாறு பற்றி அறிய உதவும் தமிழ்ச் சாசனங்களின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றின் பிரதான கட்டங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

7) இலங்கையின் ஆதிகால, இடைக்கால வரலாறு பற்றிய ஆய்வில் நாணயங்கள் பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

8) மேல்வருவனவற்றில் இரண்டின் வரலாற்று முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.
   அ. கிழக்கிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் (Brahmi Potsherds)
   ஆ. ஐரோப்பியர் கால ஆவணங்கள் (Records)
   இ. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

(1×10×2=20 புள்ளிகள்)